## தலைப்பு 262 – மாத்தறை மாவட்ட செயலகம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாத்தறை மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாத்தறை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மாத்தறை மாவட்ட செயலகத்தின் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளதென்றும்,

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 16 பிரதேச செயலகங்களினதும் மாவட்ட செயலகத்தினதும் சொத்துக்களின் கூட்டுத் தொகை ரூபா 2,346,900,420 ஆக இருந்த போதிலும் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த சொத்துக்களின் கூட்டுமொத்தம் ரூபா 2,277,821,571 ஆக காண்பிக்கப்பட்டமை | சொத்துக்களின் கூட்டுப் பெறுமதி சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | திறைசேரி குறித்துரைத்த திகதியில் சொத்துக்கள் உள்ளடக்கப்படாமையினால் ரூபா 66,977,166 தொகையும் குறைநிரப்பு கணக்கு பொழிப்பில் தகவல்களை உள்ளடக்குதல். 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டமையினால் ரூபா 1,827,292 தொகையும் இனங்காணப்படாத ரூபா 274,390 தொகையான மீதியும் காரணமாக இருந்ததுடன் எதிர்காலத்தில் இந்த வேறுபாட்டை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | யின் காரணமாக அந்த மீதிகளுக்கிடையே ரூபா 69,078,849 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | கும்புறுப்பிட்டி பிரதேச செயலகத்தில் பழைய உத்தியோகபூர்வ விடுதி மற்றும் அந்த காணிகள் மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பு இன்றி ரூபா 4,500,000 தொகைக்கு கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் உரிய சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொண்டு சரிசெய்யப்படும். |
| (இ) | மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டுகளுக்காகவும் வேலை ஒப்பந்தங்களுக்காக முற்பணமாக ரூபா 18,947,260 கூட்டுமொத்தமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டியரூபா 11,552,017 தொகை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதியாண்டின் இறுதியில் மேலும் அறவிட வேண்டிய முற்பணத் தொகை கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இந்த முற்பணத் தொகை குறித்த செலவின விடயத்திற்குரிய ஆண்டின் போது வரவு வைக்கப்பட்டு, உரிய கணக்காண்டின் போது செலவினமாக சொத்துக்களுக்குரிய செலவாக ஏற்படுத்தப்பட்டிருந்தமையும் 2019 திசெம்பர் 31 உள்ளவாறான நிதிநிலைமை தொடர்பான கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கூற்றில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளின் மீதி ரூபா 226,891,833 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும் அந்த கடன் மீதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 179,515 தொகையான மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது. அந்த கடன் மீதி சொத்துக்களாக காண்பிக்கப்பட்டமை தொடர்பாகவும் அந்த மீதியை அறவிடும் இயலுமை தொடர்பாகவும் நிச்சியமற்ற நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது. | விரைவாக கடன் மீதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இந்த நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச்செல்லப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **பெறுகை குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினதும் வருகை பதிவேடு**<br>அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.11.2 வழிகாட்டியின் பிரகாரம் மாவட்ட செயலகத்தால் பெறுகைக் குழு, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் உதவி பதவியணியினருக்குரிய வருகைப் பதிவேடு என்பன பேணப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய வழிகாட்டியின் பிரகாரம் குழுவின் செயலாளரால் வருகைப் பதிவேடு பேணப்பட வேண்டும். | பொறியியல் பிரிவு மற்றும் திட்டமிடல் பிரிவு, பெறுகை மாதிரிப் படிவத்தின் பிரகாரம் கையொப்ப பதிவேடு தனித்தனியாக பேணிச் செல்லப்படுகின்றது. |

## 1.6.3 கணக்ககாய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 09 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகளின் போது விநியோகிக்கப்பட்ட 07 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் 2020 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பீடு செய்யக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 951,034,303 ஆகும். | நிதிப் பிரமாணம் 155 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிதிப் பிரமாணம் 452(1) இல் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு ஐயவினா பதிவேடு குறித்த காலத்தின் பின்னர் பரீட்சித்து கிடைக்கப்பெற்ற கணக்காய்வு ஐயவினாக்களில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அந்த ஐயவினாக்களுக்கு உடனடியாக பதிலளிக்கப்பட வேண்டும். அவ்வாறு பதலளிப்பதில் தாமதம் ஏற்படுமாயின் ஐயவினாவுக்காக இடைக்கால அறிக்கையொன்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | எதிர்காலத்தில் விரைவாக பதலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல் மற்றும் தொடந்தும் செயற்படுத்துவதற்கு உள்ள இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா 12,001,695 கூட்டுத் | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிகளுக்குரிய பதிவேடு கணக்காய்விற்கு வழங்கப்பட வேண்டும். | கடல் கொந்தழிப்பினால் ஏற்பட்ட நட்ட இழப்புக்கள் தொடர்பான மூன்று பதிவேடுகள் தவிர ஏனைய கோவைகள் சமர்பிக்கப்பட்டுள்ளது. |

தொகையான மீதிகளுக்குரிய 03 கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.6.4 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துரை தெரிவிக்கப்படவில்லை. |

### 1.6.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | | |
| | | ரூபா | | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | | |
| (i) | XXIV ஆம் அத்தியாயத்தின் 3.6 ஆம் பந்தி | 6,845,234 | தெவிநுவர மற்றும் கிரிந்த புகுல்வெல்ல பிரதேச செயலகங்கள் இரண்டிலும் மீளாய்வாண்டில் புதிதாக வழங்கப்பட்ட கடன்களுக்காக முறையான பிரகாரம் தவணைப் பணம் அவிட வேண்டியிருந்த போதிலும் அதனைக் கவனத்திற் கொள்ளாமல் ஒரு தவணையாக ரூபா 2,500 வீதம் அறவிடப்பட்டிருந்தது. | தொடர்புடைய தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தாபன விதிக் கோவையின் பிரகாரம் சம்பளத்தின் அடிப்படையில் 10 சதவீத எல்லையின் கீழ் அறவிடுமாறு விடய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பந்தி மற்றும் 4.5 ஆம் பந்தி | 179,515 | 03 பிரதேச செயலகங்களில் வேலை நீக்கத்துக்கு உட்பட்ட 02 உத்தியோகத்தர்களிடமிருந்தும், சேவையிலிருந்து விலகிச் சென்ற ஒரு உத்தியோகத்தரிடமிருந்தும் நீண்ட காலமாக அறவிடப்படாதிருந்த கடன் மீதி தொர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த பணத்தை அறவிடுதல் தொடர்பாக எடுக்கப்படுகின்றன முயற்சிகள் கைவிடப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>---------------------------- | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 104(4) | 1,383,625 | மாவட்ட செயலகத்திலும் 04 பிரதேச செயலகங்களிலும் ஏற்பட்ட 05 வாகன விபத்துக்கள் தொடர்பாக தொடர்புடைய நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் இறுதி பரிசோதனை சபை நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கையின் பிரகாரம் எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 109(1) | 1,793,424 | 2005 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை மாத்தறை மாவட்ட செயலகத்திலும் 06 பிரதேச செயலகங்களிலும் ஏற்பட்டிருந்த 11 வாகன விபத்துக்களுக்காக 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் எஞ்சிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிப்பிரமாணம் 109 (1) இன் பிரகாரம் இறுதிப் பரிசோதனைச் சபை அறிக்கையை துரிதமாகப் பெற்று எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 569 | 1,873,454 | ஹக்மன பிரதேச செயலகத்தில் காணி வைப்புக்குரிய விபரங்கள் போதியளவான பிரகாரம் பொது வைப்புப் பதிவேட்டில் காண்பிக்கப்படவில்லை. | தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த தொகை தொடர்பாக கண்டறிதல் கடினமாக இருந்தமையால் பழைய கோவைகளை பகுப்பாய்வு செய்து புதிய பொது வைப்புப் பதிவேட்டினை சரி செய்வதற்கும் வட்டி தொகையினை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iv) | நிதிப்பிரமாணம் 571 | 123,610,614 | 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய 02 வருடங்களை விஞ்சிய 207 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | போதியளவான கட்டுநிதி கிடைக்கப் பொறாமையினால் வைப்பினை தீர்த்துவைப்பதற்கு முடியாதிருந்தது. |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் மாவட்ட செயலகத்தால் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தொடர்புடைய சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளாதிருந்த போதிலும் காலரீதியில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஈ) | காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் காணி கட்டளை 180 | - | 02 வாரங்களுக்கு ஒருதடவை பிரிவுகளில் அனுமதியற்ற காணிகளை பிடித்து வைத்தல்/நிர்மாணங்கள் தொடர்பான அறிக்கையொன்று ஒவ்வொரு கிராம உத்தியோகத்தரினாலும் பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. | தொடர்புடைய காணி கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.6.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | திஹகொட பிரதேச செயலகத்திற்குரிய அரசாங்கத்தின் காணி ஒன்று 30 வருடங்களாக நீண்டகாலத்திற்கு வாடகை அடிப்படையில் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டு வாடகைக் காலம் முடிவடைந்து 20 வருடங்களை மிஞ்சியிருந்த போதிலும் உடன்படிக்கை நீடிப்பதற்கு அல்லது அந்த காணியை அரசாங்கத்தற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வாடகையாளரினால் அதில் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு உப வாடகைக்கு வழங்கி வருமானம் உழைத்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | குறித்த காலம் முடிவடைவதற்குமுன்னர் வாடகை உடன்படிக்கையை நீடிப்பதற்கு அல்லது காணியை அரசாங்கத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் பெறவேண்டிய வாடகைப் பணம் உரிய பிரகாரம் அறவிடப்பட வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக் கொள்வதுடன் இது வரையிலும் காணி ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் அரசாங்கத்திற்கு இழக்கப்பட்டிருந்த வருமானத்தை அறவிடுவதற்கு முதல் வருடாந்த பிணைமுறி ஒன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ஹக்மன பிரதேச செயலகத்திற்குரிய 1996 ஆம் ஆண்டு முதல் கூட்டுறவுச் சங்கத்தினால் உரிமை கோரப்பட்டிருந்ததுடன் வாடகை உடன்படிக்கை கால ரீதியில் திருத்தம் செய்யப்படாமை மற்றும் நீண்டகாலமாக வாடகை உடன்படிக்கை தயாரிக்கப்படாமை என்பவற்றின் காரணமாக அரசாங்கத்திற்கு வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது. நில அளவையாளர் அறிக்கையின் பிரகாரம் அனுமதியற்ற 04 குடியிருப்பாளர்களுக்கு காணியின் ஒருபகுதி உரிமையாக இருந்ததாக குறிப்பிட்டு அதன் பின்னர் கோவை செயலிழந்து காணப்பட்டது. | காலரீதியில் வாடகை உடன்படிக்கை திருத்தப்பட வேண்டியிருந்ததுடன் நீண்டகால வாடகை உடன்படிக்கை குறித்த திகதியில் தயாரிக்கப்பட்டு வாடகை வருமானம் சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவ்வாறே அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் தொடர்பாகவும் விரைவாக | நீண்டகால வாடகை உடன்படிக்கை ஒன்றை தயாரிப்பதற்காக 1999 ஏப்ரல் 30 ஆம் திகதி உரிய அறிக்கை தென் மாகாண காணி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. வாடகையாளருடன் கலந்துரையாடி குத்தகை உறுதியின் வரைவில் காணியின் அளவை திருத்துவதற்கும் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் தொர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (இ) | தெவிநுவர பழைய பிரதேச செயலக அலுவலக கட்டிடம் அரசாங்கத்தின் காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை 191(2) இற்கு இணங்காத வகையில் 1997 ஒக்தோபர் 04 ஆம் திகதி கூட்டுறவு சங்கத்திற்கு உடன்படிக்கையொன்றின் மூலம் வாடகைக்கு வழங்கப்பட்டு, திருத்தப்பட்ட வாடகை பணத்தை செலுத்துவதற்கு தவறியமையின் அடிப்படையில் 2019 மார்ச் 30 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 6,910,183 தொகையான வருமானம் நிலுவையாக காணப்பட்டிருந்தும் நீண்டகால வாடகை உடன்படிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் காணி தொடர்பான நடவடிக்கைகளைச் செய்யும் போது காணி கட்டளைச் சட்டத்தின் கட்டளைகளை எவ்வேளையிலும் பின்பற்ற வேண்டும். அதன் பிரகாரம் வாடகை உடன்படிக்கை தயாரிக்கும் போது காணி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்யிருந்ததுடன் காணப்படுகின்ற வாடகை உடன்படிக்கை காலரீதியில் திருத்தம் செய்யப்பட்டு வாடகைப் பணம் குறித்த பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த காணி உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்குச் சொந்தமான கைப்பற்றப்பட்ட காணியொன்றாக இருந்ததுடன் நீண்டகால ரீதியில் வாடகைக்கு வழங்க முடியாமையால் காணி அமைச்சு பிரதேச செயலகம் தெவிநுவரவிற்கு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஈ) | மாத்தறை பிரதேச செயலகத்தில் ரிட்ரிட் வத்த காணியில் 10 பேர்ச் வீதம் 22 காணிக் கூறுகள் கைத்தொழிலாளர்களுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டிருந்ததுடன் ஒரு கைத்தொழிலாளர் எஞ்சிய காணியில் ஒரு பகுதியை வழங்குமாறு பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்து அளவிடல் நடவடிக்கைகளுக்காக ரூபா 57,500 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டில் அந்த | அரசாங்கத்தின் காணி தொடர்பான நடவடிக்கைகளைச் செய்யும் போது காலரீதியில் வாடகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு அரசாங்கத்திற்குஅறவிடவேண்டியவாடகை வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். | நீண்டகால ரீதியில் வாடகை உடன்படிக்கையொன்றை தயாரிப்பதற்காக 04 நிறுவனங்களின் இணக்கப்பாடு பெறப்பட வேண்டிய போதிலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரை மாத்திரம் கிடைத்திருந்தமையும் இந்த காணி பிரதேச சபைக்குச் சொந்தமாக இருந்தமையால் நில வாடகை |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனம் மூடப்படும் வரை நீண்டகால ரீதியில் வாடகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (உ) | மூடப்பட்டிருந்த மாத்/ வேரதுவ பண்டாரநாயக பாடசாலையின் நிலம் 2012 பெப்ரவரி 15 ஆம் திகதி தொழில் பயிற்சி நிலையமாக விகாரையொன்றுக்கு கையளிக்கும் போது அரசாங்கத்தின் காணிச் சட்டத்தின் கட்டளை இலக்கம் 200 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், கணக்காய்வு திகதி வரையிலும் தொழில் பயிற்சி நிலையமொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. விகாரைக்கும் சீனக்கம்பனிக்கும் இடையிலே ஏற்படுத்தப்பட்ட 02 உடன்படிக்கைகளின் நிபந்தனை இலக்கம் 02 இன் பிரகாரம் வாடகை செலுத்தாதிருந்ததாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், ஆரம்ப வாடகை உடன்படிக்கை இது வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வின் பின்னர் பிரதேச செயலாளருக்கு மதிப்பிற்குரிய விகாரை அதிபதி ரூபா 895,000 கொடுப்பனவு செய்திருந்த போதிலும், மேலும் ரூபா 1,790,000 அறவிடவேண்டிக் காணப்பட்டது. | அரசாங்கத்தின் காணி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் போது அரசாங்கத்தின் காணி கட்டளைகள் பின்பற்றப்பட வேண்டியிருந்ததுடன் சரியாக வாடகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு, அதன் பிரகாரம் வாடகை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறே விரைவாக நிலுவை வாடகை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புகளுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (ஊ) | உள்நாட்டு இறைவரித் திணைக்கத்தின் மூலம் 2018/2019 ஆண்டில் உழைக்கும் போது செலுத்தும் வரி கணிப்பீடு செய்வதற்காக உரிய எடுக்கவேண்டிய வழிகாட்டிகளின் பிரகாரம் வரி அறவிடப்பட | சுரியாக வரி கணிப்பீடு மேற்கொள்ளப்படவேண்டும். | கணக்காய்வு அவதானிப்புகளுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய போதிலும் 2019 ஏப்ரல், மே மற்றும் யூன் மாதங்களில் 05 சந்தர்ப்பங்களின் போது 03 உத்தியோகத்தர்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா 830,010 கூட்டுத்தொகையான படிகள் உழைக்கும் போது செலுத்தும் வரிக்காக உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | தெய்யந்தர தேசிய பாடசாலையின் மதில் மகா மன்நிந்த பிரிவெனா கட்டிட நிர்மாணம் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 11 வீதிகளுக்குரிய கேள்வி கோருவதற்காக செய்திப் பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்தல் முன்னரே தயாராகுதல் மற்றும் சரியான மேற்பார்வையின்றி மேற்கொள்ளப்பட்டமையால் அந்த அறிவித்தலை இரத்துச் செய்வதற்கு ஏற்பட்டு மீண்டும் அறிவித்தல் பிரசுரிப்பதற்காக ரூபா 107,525 தொகையொன்று மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது. | அறிவித்தல் பிரசுரிக்கும் போது மிகவும் கவனமாகவும், ஆக்கபூர்வமானதாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புகளுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (ஏ) | கோட்டை விளையாட்டரங்கு மாத்தறை மாவட்ட செயலாளரினால் மாகாண காணி ஆணையாளரினதும் காணி ஆணையாளர் நாயகத்தினதும் முறையான அங்கீகாரம் இன்றி கையேற்கப்பட்டிருந்தது. மாவட்ட செயலாளரின் ஆலோசனையின் அடிப்படையில் மாத்தறை மாவட்ட அரசாங்க சேவை விளையாட்டு சங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டு விளையாட்டரங்கின் பராமரிப்பு நடவடிக்கைகள் கையளிக்கப்பட்டு அதன் பிரகாரம் 2019 சனவரி 01 ஆம் | அரசாங்கத்தின் காணி தொடர்பான நடவடிக்கை எடுக்கும் போது உரிய நிறுவனத்திலிருந்து முறையான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். அவ்வாறே அரசாங்கத்திற்குஉரித்தாக வேண்டிய வருமானம் முறையற்ற முறையில் ஈடுபடுத்த | இந்த விளையாட்டரங்கின் நிர்வாக மற்றும் முகாமைத்துவங்கள் மாத்திரம் கையளிக்கப்பட்டு இருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது. தற்போது அங்கத்தவர்களாக அரசாங்கத்தின் 11 உத்தியோகத்தர்கள் இருப்பதுடன் அவர்களிடமிருந்துஆயுட்கால அங்கத்துவ பணமாக ரூபா 6,600 தொகை சங்கத்திற்கு |

திகதி முதல் 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையான காலத்திற்குரிய விளையாட்டரங்கை ஒதுக்கீடு செய்யும் வருமானம் ஆன ரூபா 246,000 கூட்டுத் தொகையொன்று விளையாட்டு சங்கத்தின் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.
விளையாட்டரங்கை வழங்கும் போது அறவிடவேண்டிய கட்டணங்கள் மாவட்ட செயலாளரினால் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்காகவும் முறையானஅங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.
அவ்வாறே மாவட்ட செயலகத்தின் கடித தலைப்பினை பயன்படுத்தி ஒதுக்கீடுசெய்தல் தினங்கள் வழங்கப்பட்டு சங்கத்தின் பற்றுச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டு காசு பெறப்பட்டிருந்தது. மேலும் இந்த விளையாட்டரங்கு தொடர்பாக காணப்பட வேண்டிய பராமரிப்பு பதிவேடு, பொருட் பதிவேடு, மின்சாரம்/நீர் தொடர்பான பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் விளையாட்டு அரங்கை ஒதுக்கீடுசெய்யும் பதிவேடு முறையாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

முடியாதிருந்ததுடன் அந்த வருமானம் அரசாங்கத்தின் வருமானமாக மாத்திரம் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊரிய பதிவேடுகள் குறித்த பிரகாரம் பேணப்பட்டு நாளதுவரையாக்கப் பட வேண்டும்.

சொந்தமாக இருந்ததாக காண்பிக்கப்பட்டிருந்தது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் விளையாட்டு அரங்கின் நடவடிக்கைகளுக்காக வேறாக சேமிப்பு கணக்கொன்றில் இந்த வருமானம் செலவு வைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட செயலாளர் விலை குழுவின் தலைவராகவும், நடவடிக்கை எடுப்பதனால் வேறான அங்கீகாரம் ஒன்று அவசியமில்லாதிருந்ததுடன் பதிவேடுகளை நாளதுவரையாக்குவதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த மதிப்பீட்டில் நிதிஏற்பாடு ஒதுக்கப்படாத இலக்கம் 262-1-1-0-2509 என்ற செலவின விடயத்திற்காக ரூபா 8,100,000 மேலதிக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் உரிய செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமையினால் ரூபா 2,190,686 தொகையான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிஏற்பாடு உரியசெயற்திட்டங் களில் மேற்கொள்ளப்படவேண்டும். | திறைசேரியில் இருந்து கட்டுநிதி கிடைக்கப் பெறாமையினால் எதிர் பார்த்த பிரதிபலனைப் பெற முடியாதிருந்தது. |
| (ஆ) | செலவின இலக்கம் 262-1-1-0-1003 மற்றும் 262-1-2-0-1003 இற்காக கூட்டுமொத்தமாக ரூபா 6,380,000 மேலதிக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்தல், திட்டமிடல் குறித்துரைத்த பிரகாரமும் சரியாகவும் மேற்கொள்ளப்படவேண்டும். | மாதாந்தம் ரூபா 2,500 படியொன்று 2019 யூலை முதல் அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களுக்கு செலுத்துவதற்காக மேலதிக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது |
| (இ) | 07 செலவின விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு போதியளவில் இல்லாமையினால் ஏனைய 23 செலவின விடயங்களில் இருந்து நிதிஏற்பாடு மாற்றப்பட்டு செலவினங்கள் செய்யப்பட்டிந்தது. அந்த நிதிஏற்பாட்டில் 8 சதவீதம் முதல் 47 சதவீதம் வரையான அதாவது ரூபா 3,990 முதல் ரூபா 22,711,200 தொகை வரையான வீச்சினை உள்ளடக்கி இருந்தது. | தேவையின் பிரகாரம் சரியாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | வருடாந்த சம்பள அதிகரிப்புடன் ஏனைய படிகளின் அதிகரிப்பு, மேலதிக நிதிஏற்பாடு ஒதுக்கப்படாமை மற்றும் எரிபொருள் விலை அதிகரித்தல் போன்றவற்றின் காரணமாக மேலதிக நிதிஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது. |
| (ஈ) | 03 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் 05 மூலதன செலவின விடயங்களுக்கும் உரிய 07 சதவீதம் முதல் 37 சதவீதம் வரையான வீச்சில் | குறித்த பிரகாரமும் சரியாகவும் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | திட்டமிடப்பட்ட பிரகாரம் செலவினங்கள் மேற்கொள்ளப்படாமை மற்றும் போதியளவான கட்டுநிதி கிடைக்கப் |

| | | |
|---|---|---|
| நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது. | | பெறாமை என்பவற்றினால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |
| (உ) 23 செலவின விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளில் 1.6 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை அதாவது ரூபா 6,000 முதல் ரூபா 14,371,000 வரையான வீச்சில் ஏனைய செலவினங்களுக்கு மாற்றப்பட்டு செலவினங்கள் செய்யப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்தல், திட்டமிடல் மற்றும் அமுல்படுத்துதல்கு றித்துரைத்த பிரகாரமும் சரியாகவும் மேற்கொள்ளப்படே வண்டும். | 1401 செலவின விடயத்திற்காக நிதிஏற்பாடு புகையிரத திணைக்களத்தின் சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரமும் ஏனைய செலவின விடயங்களின் சேமிப்பு சிறந்த முகாமைத்துவத்தினாலு ம் மாற்றப்பட்டு செலவினங்கள் செய்யப்பட்டிருந்தது. |

## 2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டின் பயன்பாடு

28 ஏனைய அமைச்சுகள், 19 திணைக்களங்கள், சனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகங்களினால் பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 7,781.87 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடுகளில் கூட்டுமொத்தமாக ரூபா 3,846.26 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டு ரூபா 3,935.6 மில்லியன் அதாவது 50.57 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) மாத்தறை நில்வலா எலிய நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மாத்தறை ஆற்றங்கரையோர பூங்கா அபிவிருத்தி செயற்திட்டத்தின் வீட்டு நிர்மாண நடவடிக்கைகளுக்காக இரண்டு சந்தர்ப்பங்களின் போது ரூபா 14,072,072 தொகையொன்று செலவின விடயம் 155-2-13-6-2509 இன் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | இந்த செயற்திட்டம் மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டமாக இருந்தமையால் மாவட்ட செயலாளரால் மேற்கூறப்பட்ட செலவினங்களைச் செய்யும் போது கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.<br><br>• உரிய வீட்டு நிர்மாண வடிவமைப்பாளரால் வழங்கப்பட்ட சேவை தொடர்பான விபரம்.<br><br>• சேவையை உறுதிப்படுத்துவதற்காக அமைச்சின் பரிந்துரை<br><br>• அமைச்சுக்களுக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை<br><br>• நிறைவேற்றப்பட்ட பணிகள் தொடர்பாக மதியுரை நிறுவனத்தில் இருந்து வழங்கப்பட்ட உறுதிப்படுத்தல்.<br>• வழங்கப்பட்ட சேவை தொடர்பாக | கொடுப்பனவு செய்யும் போது பெறப்பட்ட சேவையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான உடன்படிக்கை மற்றும் ஏனைய பதிவேடுகள் பெறப்படவேண்டும். | பின்னர் பதில் சமர்ப்பிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | உரிய அமைச்சின் மூலம் அல்லது ஏனைய நிறுவனங்களின் மூலம் (UDA) கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கின்றதா என்பது தொடர்பான உறுதிப்படுத்தல்.<br>• அமைச்சரவை குறிப்பின் பிரகாரம் செயற்திட்டத்தின் 05 ஆம் கட்ட நிர்மாணங்களை செய்வதற்காக ரூபா 772,868,820 பெறுமதிக்காக வீட்டு நிர்மாணங்களை செய்யும் சங்கத்தின் மூலம் 1996 இல் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொடுப்பனவு விகிதத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு | | |
| (ii) | மாவட்ட செயலாளரால் மேற்கூறப்பட்ட கொடுப்பனவுகளை செய்யும் போது உரிய பொறுப்புக்களில் இருந்து விடுவிக்கப்பட்டதாக நிதி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்ட போதிலும் அதற்காக பதில் கிடைத்திருக்காதுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் இது தொடர்பாக அறிவித்து | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக அமைச்சின் செயலாளரின் கவனத்திற்காக அனுப்பப்பட வேண்டும். | பின்னர் பதில் சமர்ப்பிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. | | |
| (iii) | 2019 ஆகஸ்ட் 23 ஆம் திகதி செலுத்தப்பட்ட ரூபா 5,410,081 தொகையான கட்டிட நிர்மாண வடிவமைப்பு படிக்காக சமர்ப்பிக்கப்பட்ட 07 பட்டியல்களில் கூட்டுமொத்தமாக ரூபா 24,306,500 தொகை செலுத்தப்பட்ட பெறுமதிக்கும் இனங்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | விலைப் பட்டியல்களில் காண்பிக்கப்பட்ட பெறுமதிக்கும் கொடுப்பனவு செய்யப்பட்ட பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடுகள் தொர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். | பின்னர் பதில் சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) | மாத்தறை நில்வலா நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 20 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 16,075,405 தொகையான பெறுமதியில் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் அதில் 11 வீதிகள் பூர்த்திசெய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தன. உடன்படிக்கையை கைவிட்டமை தொடர்பாக ஒப்பந்தகாரருக்கு எதிராக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கைகைளமுறித்த செயற்திட்டங்களுக்கு இடையே இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள ஒப்பந்தகாரர் தொடர்பாக காலரீதியில் நடவடிக்கை எடுத்து அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உடன்படிக்கை காலம் நீடித்தல் தாமதமடைந்ததன் காரணமாக இந்த ஒப்பந்தகாரருக்கு இந்த தொகுதியின் வேலைகள் நிறைவேற்ற முடியாதிருந்ததாக காண்பக்கப்பட்டு பின்னர் உடன்படிக்கை இரத்துச்செய்யப்பட்டமையினால் தொடர் வேலை செயற்திட்டத்திற்காக நிதிஏற்பாடு 2018 யூலை 16 ஆம் திகதியே கிடைத்திருந்தது. |
| (இ) | 2017 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 294 குடும்பங்களை மீள் குடியேற்றுவதற்காக செலவின விடய இலக்கம் 130-02-08-12-2202 இன் கீழ் 2019 | | |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 361,933,604 கூட்டுத் தொகையான செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | 13 பிரதேச செயலகங்களில் 2017 ஆம் ஆண்டில் மீள் குடியேற்ற நடவடிக்கைகளில் 1,084 குடும்பங்கள் இனங்காணப்பட்டிருந்தன. எனினும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 435 குடும்பங்களும், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 418 குடும்பங்களுமாக அந்த எண்ணிக்கை குறைவடைவதற்கு காரணமாக வருடாந்தம் புதிதாக இனங்காணப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கைக்குரிய தகவல்கள் மாவட்ட செயலகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட செயலகத்தினால் சரியாகவும் நாளதுவரையாகவும் மேற்கொள்ளப்பட்ட தகவல் முறைமையொன்று பேணிச் செல்லப்பட வேண்டியிருந்ததுடன் அது தொடர்பாக சரியான மேற்பார்வை மேற்கொள்ளப்பட வேண்டும். | பின்னர் பதில் சமர்ப்பிக்கப்படும். |
| (ii) | மாத்தறை பிரதேச செயலகத்தின் மூலம் காணியொன்றை கொள்வனவு செய்வதற்காக நலனாளிக்கு ரூபா 400,000 வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே இன்னுமொரு நலனாளிக்கு வழங்கப்பட்ட நிதி உதவிகளில் இருந்து அவரின் மகனின் காணி ரூபா 400,000 தொகையில் | நிதி உதவிகளை வழங்கும் போது நலனாளிக்கு உதவி வழங்குவதைப் போல நிதிப் பிரமாணம் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட வேண்டியிருந்ததுடன் நிதி உதவி வழங்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டதா என பரீட்சித்துக் கொள்ள வேண்டும். | பின்னர் பதில் சமர்ப்பிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்யப்பட்டு வீடொன்றை நிர்மாணிப்பதற்காக மேலும் ரூபா 500,000 தொகையும் பெறப்பட்டிருந்தது. எனினும் இந்த நலனாளிகள் இருவரும் 2019 திசெம்பர் மாதம் வரையிலும் வீட்டை நிர்மாணித்தல் மற்றும் ஆபத்தான இடமொன்றை அகற்றுதல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (iii) | திஹகொட பிரதேச செயலகத்திற்குரிய மண்சரிவு அபாயம் இனங்காணப்பட்ட காணியொன்றின் ஒருபகுதியும் மீள் குடியமர்த்துவதற்காகபெ ாருத்தமானது என பரிந்துரை வழங்கப்பட்டிருக்கும் போது புதிதாக காணியொன்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 400,000 தொகையும் வழங்கப்பட்டிருந்தது. | புவியியல் ஆய்வு அறிக்கைகளில் வழங்கப்பட்ட பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பின்னர் பதில் சமர்ப்பிக்கப்படும். |
| (iv) | மாத்தறை பிரதேச செயலகத்தின் ஒரு நபரின் வீடு புவியியல் ஆய்வு அறிக்கையின் பிரகாரம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் பாவனைக்கு சிபாரசு வழங்கப்பட்டிருந்த போதிலும் மத்திய மண்சரிவு அபாயத்துடன் உள்ள இன்னுமொரு காணியொன்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,600,000 வழங்கப்பட்டிருந்தது. | புவியியல் ஆய்வு அறிக்கைகளில் வழங்கப்பட்ட பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பின்னர் பதில் சமர்ப்பிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | தெவிநுவர பிரதேச செயலகத்தில் ஒருவருக்கு வீடொன்றுடன் காணியொன்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,558,000 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் கொள்வனவு செய்யப்பட்ட காணியின் உரித்துறுதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நலனாளிக்கு வழங்கப்பட்ட நிதி உதவிகளுக்காக தேவையான ஆரம்பப் பதிவேடுகள் சரியாக பேணப்பட வேண்டும். | பின்னர் பதில் சமர்ப்பிக்கப்படும். |
| (vi) | இடர்களினால் துன்பத்திற்கு உள்ளாகிய மக்களை மீண்டும் குடியமர்த்தும் செயற்திட்டத்தின் கீழ் மாவட்ட செயலாளரைப் போன்று பிரதேச செயலாளர்களும் கவனம் செலுத்தாதிருந்த விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.<br>• நலனாளிகளை அபாயகரமான இடங்களில் இருந்து அகற்றுதல் மற்றும் மீளகுடியமர்த்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய காலம்<br>• நிதி உதவியின் கீழ் எடுக்கப்பட்ட ஆதனங்களை விற்பதற்கு மற்றும் உரித்தற்றதாக்குவதற்கு ஏற்படும் வகையில்<br>• புவியியல் ஆய்வு | சுற்றறிக்கையின் மூலம் மேவுகை செய்யப்படாதிருந்த போதிலும் மீண்டும் குடியமர்த்தும் போது ஏற்படுகின்ற பிரச்சினைகளை இனங்கண்டு அது தொடர்பாக நடவடிக்கை எடுத்து சரியான வழிமுறைகளில் தீர்மானங்களை எடுத்து விரைவாக அவற்றை அமுல்படுத்துதல் வேண்டும். | பின்னர் பதில் சமர்ப்பிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கையின் மூலம் வழங்கப்பட்ட பரிந்துரைகளை அமுல்படுத்துதல்.<br>• அகதிகளானோரின் பெயர்ப் பதிவேடு மற்றும் வீட்டு நிதி உதவி பெறுனர்களின் பெயர்ப் பதிவேடு பேணப்படாமை. | | |
| (ஈ) | தெற்கு வலய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெவிநுவர பிரதேச செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 3,750,000 தொகையான 04 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டம் திட்டமிடப்பட்ட குறித்த காலப்பகுதியில் அமுல்படுத்தப்பட வேண்டும். | மதிப்பீடு குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிக்கப்படாமை, காணி விடுவிக்கப்படாமை தேவையான விடயங்கள் தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டமை மற்றும் நிர்மாணிப்பதற்கு முன் மேற்கொள்ளப்பட்டமை போன்றவற்றின் காரணமாக செயற்திட்டங்களை கைவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. |
| (உ) | மீளாய்வாண்டில் கிராமிய உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 1,000,000 நிதிஏற்பாடும் தெற்கு வலய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 2018 தொடர் வேலை செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1,000,000 தொகையான நிதிஏற்பாட்டின் அடிப்படையிலும் வெலிகம அரூசியா மாவத்தை வடிகாண் முறைமை அபிவிருத்தி செய்வது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | தொடர் வேலை செயற்திட்டத்திற்காக 2019 செம்தெம்பர் 25 ஆம் திகதி உடன்படிக்கை செய்து முறையான அங்கீகாரம் இன்றி ரூபா 999,844 தொகையான மதிப்பீட்டில் வேலை விடயம் திருத்தம் செய்யப்பட்டிருந்தது.. | செயற்திட்டத்தை குறித்த பிரகாரம் இனங்காண வேண்டியிருந்ததுடன் மதிப்பீட்டை திருத்தம் செய்வதற்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மொத்த குறிப்புக்கள் மற்றும் செயற்திட்டத்தின் எல்லை சம்பவ திரட்டு குறிப்புப் புத்தகத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | ஒப்பந்தகாரரின் விபர பத்திரத்தில் தற்போது கையளிக்கப்பட்டுள்ள ஒப்பந்தம் மற்றும் முன்னைய ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தம் தொடர்பான விபரங்கள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.9.1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். |
| (iii) | 2020 சனவரி 30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| • | வடிகாணின் இரண்டு இடங்களில் கொங்கிரீட் இடப்பட்டிருந்த இரும்புக் கம்பி வெளிப்பட்டு காணப்பட்டதுடன் கொங்கிரீட்டை மேவுகை செய்யும் வீதியின் உயரத்தினைவிட 05 அங்குலம் மேலே காணப்பட்டது. | வேலையினை நிர்மாணிக்கும் போது அதன் நியமம் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் தொடர்பாக கவனத்தில்கொள்ள வேண்டும். | தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையின் பிரகாரம் கொங்கிரீட்டை மேவுகை செய்து வீதிமட்டத்திற்கு சரி செய்யப்பட்டுள்ளது. |
| • | 4 அங்குலம் மற்றும் 5 அங்குல தடிப்பத்துடன் கொங்கிரீட் மேவுகை 92 இற்கு கொடுப்பனவு செய்வதற்காக பரிந்துரை காணப்பட்ட போதிலும் வடிகாணின் அடிப்படையில் 71 மேவுகைகள் மாத்திரம் போடப்பட்டிருந்தன. | கொடுப்பனவு மேற்கொள்ளும் போது மதிப்பீட்டின் பிரகாரம் குறித்த நியமத்தில் நிர்மானித்தல் இடம்பெறவேண்டியதா என உறுதிப்படுத்துதல் வேண்டும். | ஓரப் பிரதேசங்களில் போடப்பட்டிருந்த 04 மற்றும் 08 கொங்கிரீட் மேவுகைகள் இது வரையிலும் உரிய பிரகாரம் இடங்களில் வைப்பதற்கும், பௌதீக ரீதியில் காணப்படாத 9 மேவுகைகளின் பெறுமதி பட்டியல்களில் குறைக்கப்பட்டு |

| | | |
|---|---|---|
| மேலும் 12 மேவுகைகள் வீதியின் ஓரங்களில் வைக்கப்பட்டிருந்ததுடன் 09 மேவுகைகள் பௌதீகரீதியில் காணப்படவில்லை. | | கொடுப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| • 15 மீற்றர் வடிகாண் அளவான தூரத்தில் கொங்கிரீட் இடல் மேற்பார்வையின்றி மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிர்மாணங்களுக்காக கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது மதிப்பீட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த தா என உறுதிப்படுத்துதல் வேண்டும். | இந்த 15 மீற்றரும் தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு அறிவிக்காமல் மேற்கொள்ளப்பட்டமையினால் பட்டியலின் கொடுப்பனவிற்காக உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. |
| • வேலைக்கு ஈடுபடுத்தப்பட்ட 1:2:4 கொங்கிரீட்களின் தரப் பரிசோதனை அறிக்கை பெறப்படாமல் கொடுப்பனவு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. | குறித்த தரப் பரிசோதனை அறிக்கை பெறப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். | இதன் பின்னர் இவ்வாறான நிர்மாணங்களுக்காகவும் தரப் பரிசோதனை மேற்கொள்வதற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

## 2.3 வைப்பு மீதிகள்

-------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாத்தறை மாவட்ட செயலகத்தில் 2018 ஆம் ஆண்டின் யூன் 12 ஆம் திகதி முதல் திசெம்பர் 31 வரையான பெறப்பட்ட 34 கேள்வி காப்புறுதி வைப்புக்களினது கூட்டுத் தொகையான ரூபா 1,022,296 தொகை 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வைப்பாளர்களுக்கு செலுத்தவதற்கு அல்லது நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்பு மீதிகள் தொடர்பாக முறையாகவும் காலரீதியிலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திறைசேரிக்கு ஆண்டின் போது போதியளவான கட்டுநிதி கிடைக்கப் பெறாமையின் காரணமாக உரிய வைப்பாளர்களுக்கு செலுத்துவதற்கு முடியாதிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) இடர் உதவி வழங்குவதன் கீழ் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டில் சேமிக்கப்பட்ட ரூபா 1,955,682 கூட்டுத்தொகையானது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வைப்பு மீதி தொடர்பாக முறையானதும் காலரீதியானதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இது வரையிலும் தீர்க்கப்படாது காணப்படுகின்ற மீதியை எதிர்காலத்தில் தீர்த்துவைப்பதற்கும் எஞ்சிய பணத்தை அரசாங்க வருமானத்திற்கு எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) அத்துரலிய பிரதேச செயலகத்தில் 2017 இல் வெள்ளத்தினால் பாதிப்பிற்கு உட்பட்ட வீட்டிற்கு நிதி உதவி உரித்தான நலனாளிக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 1,600,000 தொகை 2018 மார்ச் 07 ஆம் திகதி முதல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வைப்பு மீதி தொடர்பாக முறையானதும் காலரீதியானதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இரண்டு நபர்களுக்காக காணியொன்றை கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருந்த பணம் அவர்கள் இருவரினதும் உறவினர்களை விசாரித்ததன் பின்னர் ஒருவருக்கு ரூபா 1,200,000 மாத்திரம் வழங்கப்பட்டு எஞ்சிய தொகை அரசாங்க வருமானத்திற்கு எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

## 2.4 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிட்டபெத்தர பிரதேச செயலகத்தினால் நடைமுறைக் கணக்கில் ரூபா 4,597,305 தொகையான மீதியொன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் காசேட்டின் மீதி சரிசெய்யப்பட வேண்டும். | இந்த கணக்கு சுயமாக நாளாந்தம் வங்கி மீதிக்கு மாற்றப்படுகின்ற வங்கிக் கணக்கு முறைமையில் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------------

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கட்டிட நிர்மாணத்திற்காக (2104) 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 120,700,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அதில் ரூபா 44,245,750 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு நிதிஏற்பாட்டுத் தொகையில் 37 சதவீதமாக இருந்தது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டும். | பிட்டபெத்தர பிரதேச செயலகத்தில் நிர்மாண ஒப்பந்தகாரரின் தாமதத்தினால் திஹகொட பிரதேச செயலகத்தின் வேலை முடிவடைந்த போதிலும் பட்டியல் சமர்ப்பிக்கப்படாமையினாலும் மாவட்ட செயலகத்தின் நிர்மாணத்திற்காக தொல்பொருளியல் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாமையினாலும் இந்த சேமிப்பு ஏற்பட்டிருந்தது. |
| (ஆ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பின்வரும் விபரங்களில் குறிப்பிடப்பட்ட நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டதாக காண்பிக்கப்பட்டது. கணக்காய்விற்கு வழங்கப்பட்ட செலவின விபரங்களின் பிரகாரம் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை காணப்பட்ட போதும் கையிலுள்ள பட்டியல் அல்லது கொடுப்பனவு செய்வதற்குள்ள கடப்பாடுகள் தொடர்பான விபரங்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்திசெய்யப்படாத பெறுமதி இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் கையிலுள்ள பட்டியல் அல்லது கொடுப்பனவு செய்வதற்குள்ள கடப்பாடுகள், பொறுப்புக்களாக காண்பிக்கப்பட வேண்டும். | திஹகொட, திக்வெல்ல பிரதேச செயலக நிர்மாணம் 2019 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்ட போதிலும் குறைபாடுகள் காணப்பட்டமையினால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் அப்பெறுமதி 2020 இன் தொடர் வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மாலிம்பட, திக்வெல்ல பிரதேச செயலகத்தின் மதிப்பீட்டினை விட குறைவான வேலை |

| | | | |
|---|---|---|---|
| | • திஹகொட பிரதேச செயலகத்தின் கட்டிட நிர்மாணம்<br>• திக்வெல்ல பிரதேச செயலகத்தின் கட்டிடநிர்மானத்தின் I ஆம் மற்றும் II ஆம் கட்ட மிகுதி வேலைகள்.<br>• மாலிம்பட பிரதேச செயலகத்தின் விராந்தை நிர்மாணம். | | பூர்த்திசெய்யப்பட்டமை யினால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கையிலுள்ள பட்டியல் கடப்பாடுகள் பொறுப்புக்களாக காட்டும் தேவையொன்று ஏற்பாடாதிருந்தது. |

**3.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகத்தின் புதிய கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் மேற்கொள்ளப்படாமையினால் ரூபா 4,000,000 தொகையான மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பணிப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டும். | தொல்பொருளியல் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு முடியாமையினால் இந்த நிதி சேமிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கட்டிட புனர்நிர்மாணம் மற்றும் திருத்தங்களின் (2001) இன் கீழ் காண்பிக்கப்படுகின்ற மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 707,000 தொகையான விளையாட்டு அரங்கை பழுதுபார்க்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விளையாட்டுப் பிரிவு நடாத்திச் செல்லப்படுகின்ற கட்டிடம் மாவட்ட செயலகத்திற்கு உரியதாகையால் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் உரிய வரிசை அமைச்சின் மூலம் நிதி ஏற்பாடு பெற்றுக் கொள்ள முடியாதிருந்தமையினால் அந்த பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |

**3.3 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திஹகொட பிரதேச செயலகத்தின் புதிய மூன்று மாடிக் கட்டிட நிர்மாணம் | | |
| (i) உடன்படிக்கையின் பிரவு இலக்கம் 17.1 இன் பிரகாரம் 2016 திசெம்பர் 28 ஆம் திகதி முதல் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலம் 546 நாட்களாக இருந்த போதிலும் அங்கீகாரம் இன்றி 06 சந்தர்ப்பங்களின் போது நாட்கள் நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் உடன்படிக்கையின் பிரிவு 4.9.1 இன் பிரகாரம் தாமதக் கட்டணமாக (Liqudated damages) நாளொன்றுக்கு ரூபா 120,000 தொகை அறவீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணங்கள் குறித்த காலத்தில் பூர்த்தி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். காலத்தை நீடிப்பதற்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (ii) உடன்படிக்கையின் பிரிவு 27.1 இன் பிரகாரம் 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிகழ்ச்சித் திட்டம் Programme for the works சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அதற்காக பின்தொடர் நடவடிக்கைகளாக உடன்படிக்கையின் பிரிவு 27.4 இன் பிரகாரம் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 02 சதவீதம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கவில்லை. ஒவ்வொரு மாதத்தின் போதும் எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்கள் ஒப்பந்தகாரர்களிடம் இருந்த பெறப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் உடன்படிக்கையை மீறும் போது அதில் காணிபிக்கப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | உடன்படிக்கையின் பிரிவு 13.1 மற்றும் 13.2 இன் பிரகாரம் காப்புறுதி உடன்படிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 2019 யூலை 31 ஆம் திகதி வரை காப்புறுதி உடன்படிக்கை காலாவதியாகியிருந்தது மாத்திரம் கோவையில் குறிப்பிடப்பட்டிருந்தது. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் காப்புறுதி உடன்படிக்கையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (iv) | கேள்விப் பதிவேட்டின் பட்டோலை 5 இன் பிரகாரம் Bidding data & Contract data பொதுவான (General) விபரங்களின் கீழ் 9.1 ஆம் பிரிவின் பிரகாரம் நியமிக்கப்பட்ட பதவியணியினர் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் பரீட்சிக்கப்பட்ட பட்டியல் இலக்கம் 12 இன் பிரகாரம் ரூபா 151,086 தொகை பதவியணியினருக்காக செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | நியமிக்கப்பட்ட பதவியணியினர் விபரங்கள் பெறவேண்டியிருந்த துடன் அதற்காக கொடுப்பனவு செய்வதற்கு முன் உடன்படிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) | பிட்டபெத்தர பிரதேச செயலகத்தில் புதிய ஐந்து மாடிக் கட்டிட நிர்மாணம்<br>-------------------------------------- | | |
| (i) | இந்த நிர்மாணத்திற்காக ரூபா 44,785,376 தொகைக்கு வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தம் 2019 ஆகஸ்ட் 22 இல் உள்ளவாறு நிர்மாணம் முடிவடைய வேண்டியிருந்த போதிலும் 2019 நவம்பர் 30 இல் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் 10 சதவீதமாக இருந்தது. மேலும், மீண்டும் 2020 சனவரி 02 வரை நாட்கள் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்குள்ள இயலுமை மற்றும் அரசாங்கத்திற்கான நிதிப் பற்றாக்குறை நிதி | உடன்படிக்கைக் காலம் அசாதாரணமாக நீடிக்கும் போது அந்த நீடிப்புச் செய்யப்பட்ட காலத்தில் நிர்மாணங்களைச் செய்வதற்குள்ள இயலுமை தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | நட்டம்/ இழப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | வேலைத் தளத்தில் நாளாந்த தொழிலாளர் வேலைப் பதிவேடு மற்றும் உபகரணங்கள் தொடர்பான அறிக்கை, இருப்புப் பதிவேடு எதுவும் ஒப்பந்தகாரரினால் பேணப்பட்டிருக்கவில்லை. | வேலைத் தளத்தில் பேணப்பட வேண்டிய பதிவேடுகள், இருப்பு அறிக்கைகள் உரிய பிரகாரம் வைத்துக் கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (iii) | கட்டிட நிர்மாணத்திற்காக குழி வெட்டுவதன் காரணமாக மண் சரிவு அபாயமொன்று காணப்படுகின்றமை தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தினால் 2019 ஒக்தோபர் 22 ஆம் திகதிய அறிக்கையில் காண்பிக்கப்பட்ட போதிலும் அதற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | புவியியல் ஆய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்ட செயற்பாடுகள் வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (iv) | முற்பண காப்புறுதியின் காலம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் செலுத்தப்பட்ட முற்பணத் தொகையில் ரூபா 11,333,175 தொகை (பெறுமதி சேர் வரியுடன்) அறவிடுவதற்கு எஞ்சியிருந்தது. | அரசாங்கத்திற்கு ஏற்படக் கூடிய நட்டங்களை இனங்கண்டு அவற்றைக் குறைப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |

**3.4 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ)(i) | மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 100,940,000 தொகையான திஹகொட பிரதேச செயலகத்தின் புதிய மூன்று மாடிக் கட்டிட நிர்மாணம் | மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்க வேண்டியிருந்ததுடன் தொடர்புடைய | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்கள பெறுகை குழுவின் எல்லையினை விஞ்சுவதால் ரூபா 99,971,000 தொகைக்கு திருத்தப்பட்டு மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுகை நடைமுறைகளின் மூலம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன் மற்றும் வினைத்திறன் உச்ச அளவில் செய்யும் நோக்கம் கைவிடப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டியின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (ii) | மதிப்பீட்டு தொகையை அடிப்படையாகக் கொண்டு ரூபா 51,908,831 தொகைக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதால் ஏனைய கேள்விகள் நிராகரிக்கப்பட்டதற்குரிய காரணத்தை குறிப்பிடல் மற்றும் ஒப்பந்தக் கிரயம் 48 சதவீதத்தினால் குறைவடைந்தமைக்காக கிரய பகுப்பாய்வு பெற்றுக் கொள்ளல் என்பன தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த மதிப்பீட்டு பெறுமதியினை விட ஒப்பந்தகாரரின் கிரயம் கணிசமான அளவு குறைகின்ற சந்தர்ப்பங்களின் போது கிரய மதிப்பீடொன்று பெறப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) | மதிப்பீட்டு பெறுமதி ரூபா 73,600,000 தொகையான பிட்டபெத்தர பிரதேச செயலகத்தின் புதிய ஐந்து மாடிக் கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 44,785,376 தொகையில் 2018 நவம்பர் 15 ஆம் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் நிர்மாண வேலைகள் 2019 ஆகஸ்ட் 22 ஆம் திகதி பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | பொறியியல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மதியுரை நிறுவனமாக செயற்பட்ட கட்டிடத் திணைக்களத்தின் பிரதிநிதி ஒருவர் கேள்வி மதிப்பீட்டுக்கு பங்குபற்றியிருக்கவில்லை. அவ்வாறே நிர்மாண நடவடிக்கைகளுக்காக நிலம் மதியுரை நிறுவனத்தினால் பரீட்சிக்கப்பட்டு நிலத்தின் அளவு மற்றும் பொருத்தமான தன்மை தொடர்பான விடயங்களை காண்பித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கேள்வி மதிப்பீட்டின் போது மதிவுரை நிறுவனம் பங்குபற்ற வேண்டும். மதிப்பீடு தயாரிப்பதற்கு முன் உரிய மதியுரை நிறுவனத்தினால் உரிய நிலம் பரீட்சிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (ii) | கேள்வி திறக்கும் அறிக்கை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அறிக்கை என்பவற்றின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட 06 கேள்விகளில் ஆகக் குறைந்த விலையினை அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய கேள்விகள் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணம் பெறுகைக் குழுவினால் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தகாரரை தெரிவு செய்யும் போது அது தொடர்பான குறித்த காரணங்கள் காண்பிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (iii) | ஒப்பந்தகாரரின் கிரயம் பொறியியல் மதிப்பீட்டை விட 12 சதவீதத்தினால் அதாவது ரூபா 6,344,705 இனால் குறைவடைந்திருந்த போதிலும் அது தொடர்பாக கிரய பகுப்பாய்வொன்று பெறப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு பெறுமதியை விட ஒப்பந்தகாரரின் கிரயம் குறைவடைகின்ற சந்தர்ப்பங்களின் போது கிரய பகுப்பாய்வொன்று பெறப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (iv) | கேள்விப் பதிவேட்டின் 05 ஆவது பட்டோலையின் Bidding data & Contract data (General) 9.1 ஆம் பிரிவின் பிரகாரம் நியமிக்கப்பட்ட பதவி அணியினர் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த பிரிவிற்கு இணங்காமைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே போதியளவான | பதவி அணியினர் தொடர்பான போதியளவானதும் சரியானதுமான தகவல்கள் பெறவேண்டியிருந்த துடன் அதன் பிரகாரம் செயற்படாத சந்தர்ப்பங்களுக்காக பின்தொடர் | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | ஊழியர்களின் எண்ணிக்கை ஈடுபடுத்தப்படாமையின் அடிப்படையில் ஒப்பந்தம் அசாதாரணமாக தாமதத்துடன் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும். | |
| (v) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரிவு 13.1 மற்றும் 13.2 இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முறையான காப்புறுதி உடன்படிக்கை சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் சமர்ப்பிக்கப்பட்ட காப்புறுதி உடன்படிக்கை காலாவதியாகியிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் காப்புறுதி உடன்படிக்கை பெறவேண்டியிருந்த துடன் அது கால ரீதியில் பேணிச் செல்லப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (vi) | உடன்படிக்கையின் பிரிவு 27.1 இன் பிரகாரம் Programme for the work வேலைகள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அதற்கு இணங்காதவைகளுக்காக பிரிவு 27.4 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு ஒவ்வொரு மாதத்தின் போதும் நாளது வரையாக்கப்பட்ட Programme for the work பொதுவான நிகழ்ச்சித் திட்ட வேலைகள் ஒப்பந்தகாரரிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் பெறப்பட வேண்டிய Programme for the work நிகழ்ச்சித் திட்ட வேலைகள் பெறப்பட வேண்டியிருந்ததுடன் அவ்வாறு இல்லாதவிடத்து அதற்காக உடன்படிக்கையின் பிரகாரம் பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |

(இ) மாத்தறை மாவட்ட திட்டமிடல் செயலகத்தினால் 2019 ஆம் ஆண்டில் 27 நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய 6,542 அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 6,785 மில்லியன் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1,998 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டங்களுக்குரிய பெறுகை நடைமுறைகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2006 இன் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகைக்கு தயாராகுதல் மற்றும் திட்டமிடலின் கீழ் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சகல செயற்திட்டங்களையும் மேவுகை செய்யும் வகையில் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (ii) | பெறுகை வழிகாட்டிக் கோவை - 2006 இன் 2.11.1 இன் பிரகாரம் பெறுகைக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் ஒன்றிணைந்த முதலாவது கூட்டமொன்று நடாத்தப்பட்டு பெறுகை கால அட்டவணையொன்று தயாரித்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.11.1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (iii) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.11.2 இன் பிரகராம் அறிக்கையிடும் பணிகளுக்காக அங்கத்தவர்களின் வருகைப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.11.1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (iv) | 08 நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய 44 செயற்திட்டங்களுக்கு தேசிய போட்டியாளர் கேள்வி கோருவதற்கு பதிலாக மாத்தறை மாவட்ட செயலகத்தின் 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பெறுகை நடவடிக்கைகளுக்காக பெறுகைக் குழு/ தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு படியாக ரூபா 2,529,000 செலுத்தும் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.9.1 வழிகாட்டியில் காண்பிக்கப்பட்ட விடயங்கள் பூர்த்தி செய்திருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.9.1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்கத்தின் காணியாக இனங்காணப்பட்ட காணி மற்றும் ஏனைய காணி அளவுகள் தொடர்பான பதிவேடொன்று அல்லது தகவல் முறைமையொன்று மாவட்ட செயலகத்தினால் அல்லது 11 பிரதேச செயலகங்களினால் பேணப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் காணிகளை உரியவாறு இனங்கண்டு பதிவேடுகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) | காணி கட்டளை இலக்கம் 180 கீழ் கிராம உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுவது தொடர்பில் அரசாங்கத்தின் காணிகளை குறித்தவாறு இனங்காண்பதற்குரிய தரவு முறைமையொன்று காணப்படாமையினால் அனுமதியற்ற பிடித்தல்கள் மண் நிரப்புதல் தொடர்பாக அறிக்கையிடல் போன்ற பணிகளை நிறைவேற்றுதல் மெதுவாக இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டது. | அரசாங்கத்தின் காணிகளை உரியவாறு இனங்கண்டு பதிவேடுகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (இ) | அரசாங்கத்தின் காணிகள் நீண்ட கால ரீதியில் வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக 11 பிரதேச செயலகங்களின் 194 கோவைகள் பராமரிக்கப்பட்டிருந்ததுடன் 08 கோவைகள் மாத்திரம் நீண்ட கால வாடகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு வருமானம் அறவிடப்பட்டிருந்தது. | நீண்டகால வாடகை உடன்படிக்கையை தயாரிக்கும் பணிகள் சரியான மேற்பார்வையுடன் கால ரீதியில் நிறைவேற்றுவதன் மூலம் காணிகளில் இருந்து அரசாங்கத்திற்கு உழைக்கக்கூடியதாக வுள்ள வருமானத்தை | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | | பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (ஈ) | அரசாங்கத்தின் காணி தொடர்பான தரவுகள் e-Slims என்ற பெயரில் தகவல் முறைமையில் உள்ளடக்குதல் 2016 ஒக்தோபர் மாதம் இறுதியளவில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், கம்புறுபிட்டிய, கிரிந்தபுஹுல்வெல்ல, திக்வெல்ல, மாத்தறை, மாலிம்பட, ஹக்மன மற்றும் திஹகொட போன்ற 07 பிரதேச செயலகங்களினால் இந்த இலக்கு 2019 நவம்பர் 11 ஆம் திகதி வரையிலும் அடையப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் உரிய பணிகள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (உ) | தெவிநுவர பிரதேச செயலகத்தில் காணி இன்றிய நபர்களுக்காக பகிர்ந்தளிக்கும் நோக்கில் கிராமங்களை விரிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நில அளவுகளில் 14 ஏக்கர் 28.9 பேர்ச் அளவான 04 காணிகளுக்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் ரூபா 70.7 மில்லியன் நஷ்ட ஈடாக செலுத்தப்பட்டு கைப்பற்றப்படும் செயற்பாடுகள் பூர்த்தியடைந்திருந்த போதிலும் 2019 ஒக்தோபர் 30 ஆம் திகதி வரையிலும் கைப்பற்றிய நோக்கத்திற்காக ஈடுபடுத்தப்படாது அந்த காணி பயனற்று காணப்பட்டது. | காணிகள் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் போது கால ரீதியில் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு விரைவாக நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2008 ஆகஸ்ட் 20 ஆம் திகதிய 2008/4 ஆம் இலக்க காணி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட காணி இல்லாதவர்களை குடியிருக்கும் பதிவேட்டின் பிரகாரம் 11 பிரதேச செயலகங்களில் தகைமை பெற்ற 11,033 நபர்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அந்த விண்ணப்பதாரர்களுக்கு (மாத்தறை, தெவிநுவர பிரதேச செயலகங்கள் தவிர) பகிர்ந்தளிப்பதற்கு போதியளவான காணி ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் இல்லாதிருந்தமையால் மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 2.3 இல் குறிப்பிடப்பட்ட செயல்முறைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |

## 3.6 இழப்பு மற்றும் நட்டங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 பெப்ரவரி 12 ஆம் திகதிய 02/2016 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா 343,435 கூட்டுத் தொகையான 03 வாகன விபத்துக்கள் தொர்பாக எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒவ்வொரு வாகனத்திற்கான உள்ளபடியான நட்ட அறிக்கை காணப்படாமையினாலும், மேலும் வாகனமொன்று வழக்கு விசாரணை முடிவடையாதிருந்தமையினாலும், ஏனைய வாகனத்தின் இறுதிப் பரிசோதனைச் சபை அறிக்கை கிடைக்கப்பெறாமையினாலும் இந்த நிலைமை ஏற்பட்டிருந்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான கெப் வண்டியொன்று 2018 சனவரி 01 ஆம் திகதி முறையான அனுமதி பெற்றுக்கொள்ளப்படாமல் சாரதியினால் ஓட்டிச் செல்லப்பட்டு ஏற்பட்ட இரண்டு விபத்துக்களினால் சாரதியின் வேலை நிறுத்தப்பட்டிருந்தது. எனினும் விபத்து ஏற்பட்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நட்டத்தின் கூட்டுத் தொகையான ரூபா 882,394 தொகையை புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு / அறவிடுவதற்கு மற்றும் அதற்குரிய பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் தொடர்ச்சியாக தாமதமாயிருந்தது. எனினும் உரிய சாரதி 2019 நவம்பர் 21 ஆம் திகதி ஓய்வு பெற்று சென்றுள்ளார். | தொடர்புடைய நிதிப் பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் வீரைவாக எடுக்கப்பட வேண்டும். | நிதிப் பிரமாணம் 104(4) இன் இறுதி பரிசோதனை அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளதுடன் மிகுதி நடவடிக்கைகள் விரைவாக பூர்த்தி செய்யப்படும் என்பதை குறிப்பிடுகின்றோம். |
| (இ) | 2017 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக 03 பிரதேச செயலகங்களுக்கு ஏற்பட்ட ரூபா 102,300 தொகையான இழப்பினை புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு மாவட்ட செயலாளரால் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நட்டம் மற்றும் இழப்பு தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | அக்குரஸ்ஸ பிரதேச செயலாளரால் ஆரம்ப அறிக்கை சமர்ப்பிக்கும் போது ஏற்பட்ட தாமதம் இதற்கான காரணமான இருந்தமையும் எதிர்காலத்தில் இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு வாகன விபத்துக்கள் தவிர ரூபா 16,026,607 கூட்டுத்தொகையான இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் 02-36 வருடங்கள் வரையான காலம் முதல் முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் பதிவழிப்பதற்கோ அல்லது அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டம் மற்றும் இழப்பு தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | வழக்கு நடவடிக்கைகள் முடிவடையாதிருந்தமையும் நிதிப் பிரமாணம் 104(4) இன் அறிக்கை தாமதமடைந்தமையும் சில கோவைகளின் அறிக்கை கண்டுபிடிக்க முடியாதிருந்தமையும் இந்த நிலைமைக்கு காரணமாக இருந்ததுடன் எதிர்காலத்தில் விரைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**3.7 முகாமைத்துவ நலிவுகள்**

-----------------------------------------------
பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வெலிகம பிரதேச செயலகத்தின் 02 ரூட் 11 பேர்ச் காணி அளவொன்று முப்பது வருட வாடகை உடன்படிக்கையின் கீழ் வாடகைக்கு வழங்கப்பட்டு 2017 ஆகஸ்ட் 9 ஆம் திகதியில் உள்ளவாறு 30 வருடங்கள் பூர்த்தியாகியிருந்த போதிலும் வாடகை உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கும் 2017 ஆம் ஆண்டின் பின்னர் வாடகை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கால ரீதியில் வாடகை உடன்படிக்கையை புதுப்பிப்பித்து வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) மாத்தறை பிரதேச செயலகப் பிரவில் மடிஹ கிழக்கு மற்றும் மேற்கு பிரிவுகளுக்குரிய 02 ஏக்கர், 19 பேர்ச் அளவான வெள்ளை தும்பு கைத்தொழில்சாலை நடாத்தப்பட்டிருந்த காணி 1976 ஆம் ஆண்டில் காணி கைப்பற்றல் சட்டத்தின் பிரகாரம் அரசாங்கத்திற்கு கையேற்கப்பட்டிருந்த போதிலும் அந்த கோவை கணக்காய்வு சமா்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) 01 ரூட் 36 பேர்ச் அளவான காணியில் சமுர்த்தி அதிகார சபையின் மூலம் ரூபா 2,139,000 தொகை செலவில் சமுர்த்தி பொது சங்க அலுவலகம் நிர்மாணிக்கப்பட்டு 18 வருடங்கள் அளவிலான | அரசாங்கத்தின் காணி கையேற்கும் போது பின்பற்றப்பட வேண்டிய முறையான | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | காலமொன்று நடாத்திச் செல்லப்பட்டிருந்த போதிலும் அதற்காக முறையான அனுமதி அல்லது உரித்து கையளித்தல் பிரதேச செயலாளரால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (ii) | 2015 ஆம் ஆண்டு முதல் சமுர்த்தி பொது சங்க அலுவலகம் வேறொரு கட்டிடத்தில் நடாத்தச் செல்லப்பட்டிருந்த போதிலும் பிரதேச செயலாளரால் மேற்கூறப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயனற்ற காணி கட்டிடங்களை கால ரீதியில் கையேற்று ஆக்க பூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (iii) | பிரதேச செயலாளர் காணி ஆணையாளர் நாயகத்தின் முறையான அங்கீகாரம் இன்றி காணியினை கைப்பற்றி நோக்கத்திற்கு புறம்பாக சமுர்த்தி அதிகார சபைக்கு, தென் மாகாண பிரதம அமைச்சிக்கு காணியின் உரித்தை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | காணியினை கையேற்கும் போது காணி ஆணையாளரின் அங்கீகாரம் சகல சந்தர்ப்பங்களிலு ம் பெறப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (இ) | மாத்தறை பிரதேச செயலகத்தில் பொருத்தப்பட்டுள்ள மின் பிறப்பாக்கிக்காக பொருத்துதல் செலவினம், பராமரிப்பு செலவினம் மற்றும் சேர்விஸ் போன்ற செலவினங்களாக அறிக்கையிடப்பட்ட ரூபா 4,082,211 கூட்டுமொத்தமான தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும் 2015 மார்ச் மாதம் புதிய அலுவலகம் திறக்கப்பட்டது முதல் இது வரையும் மின் பிறப்பாக்கி செயலிழந்து காணப்பட்டமையினால் மேற்கூறப்பட்ட தொகை பயனற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டது. | அரசாங்கத்தின் பணம் வினைத்திறனாக ஈடுபடுத்தப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (i) | காணப்பட்ட சேர்விஸ் உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சேவை தவணைகள், பராமரிப்பு செய்யப்பட்ட திகதிகள் மற்றும் மேலதிக சேவைகள் தொடர்பான பதிவேடொன்றோ அல்லது குறிப்புக்களோ பிரதேச செயலகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. | குறித்த பிரகாரம் பதிவேடு பேணிச் செல்லப்பட வேண்டியிருந்தது டன் அந்த பதிவேடு நாளது வரையாக்கப்படவு ம் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |
| (ii) | இந்த மின் பிறப்பாக்கிக்குரிய பட்டியல்களை செலுத்துவதற்கு முன் அதன் செயற்படு தன்மை தொடர்பாக அறிக்கையொன்று பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்படாதிருந்ததுடன் 10 சதவீத நிறுத்தி வைத்தல் பணத்தையும் விடுவிப்பதற்கு முன் அதன் செயற்படு தன்மை தொடர்பாகவும் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவு செய்வதற்கு முன் மின்பிறப்பாக்கியி ன் செயற்படு தன்மை சரியாக பரீட்சிக்கப்பட்டு அறிக்கையொன் று பெறப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக்காக உரிய பிரிவுகளின் மூலம் பதில் கிடைத்ததும் உடனடியாக சமர்ப்பிக்கப்படும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கத்தினை அடைதல்.

--------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 இன் பிரகாரம் அடையப்பட வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கு தயாராகுதல் தொடர்பான பரீட்சிப்பின் போது மாவட்ட செயலகத்தினால் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் பத்திரம் 2030 தொடர்பாக 2019 ஆம் ஆண்டில் கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்காக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். |

## 5. நல்லாளுகை

### 5.1 பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மாவட்ட செயலகத்தினால் இணையதளமொன்றை வடிவமைத்து அதன் மூலம் தேவையான அறிவுறுத்தல்களைச் செய்தல் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகளை பெற்றுக் கொள்ளும் திட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இணையதள முறைமையொன்று வடிவமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) | பொது மக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக பொது மக்கள் முறைப்பாட்டு பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | பொதுமக்கள் முறைப்பாடு பதிவேடொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். |